Roll No. | | | | | |

# INDIAN SCHOOL SALALAH
## FIRST TERM EXAMINATION – SEPTEMBER 2026

**TAMIL – SL (006)**

**Class: X** **DATE: 16/09/2026**

**Time: 3 Hours** **Maximum Marks: 80**

---

**General Instructions:**

- **This question paper contains 14 questions in 7 pages.**
- **Marks are indicated against each question.**
- **The question paper contains FIVE sections.**
- **Section A - Contains 2 questions.**
- **Section B - Contains 4 questions.**
- **Section C - Contains 4 questions.**
- **Section D - Contains 1 question.**
- **Section E - Contains 3 questions.**
- **Attempt as per specific instructions for each question.**
- **Write down the serial number of the question in the answer booklet before attempting it.**

## SECTION - A

## பகுதி - அ (படித்தல் திறன் 10 மதிப்பெண்கள்)

**1. பின்வரும் பத்தியைப் படித்து அதையடுத்து வரும் பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. 5 x 1= 5**

கோவலனின் தந்தையாகச் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் மாந்தர் மாசாத்துவான். தரை வணிகத்தில் சிறப்புற்ற மாசாத்துவான் காப்பியத்தின் பல காதைகளில் இடம்பெற்றிருந்தாலும் முதன்மை மாந்தர்களுக்குத் துணைநிற்கும் துணைநிலை மாந்தர் என்னும் வகைமைக்குள் அடங்கும் பாத்திரம் ஆகும். சோழ மன்னனின் பெருமைக்கு இணையான பெருமை கொண்டவன் என்றும் தான் ஈட்டிய பொருளால் பிறரைக் காத்து வாழும் நற்பண்பு கொண்டவன் என்றும் மாசாத்துவானைப் போற்றியுள்ளார் இளங்கோவடிகள். கண்ணகியும் கோவலனும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வரும் நாளில் மாசாத்துவானின் மனைவியானவள் கோவலனையும் கண்ணகியையும் தனி வாழ்க்கை அமைத்துக் கொள்வதற்குத் தேவையானவற்றை வழங்கினாள். கணவன், மனைவி என்னும் இல்வாழ்க்கையில் நுழைந்து விட்டால் அவர்களுக்கென்று தனிப்பட்ட விருந்தினர்கள் வருவார்கள். அவர்களை வரவேற்று மகிழும் வாழ்க்கைக்கு அவர்கள் பழகிட வேண்டும் என்று அவர்களைத் தனி வாழ்க்கைக்கு அனுப்பினாள் என்று இல்வாழ்க்கை தொடர்பான இடத்தில் மாசாத்துவானின் மனைவியைப் பற்றித் தெரிவித்துள்ளார் இளங்கோ.

**வினாக்கள்:**

i) மாசாத்துவான் யாருடைய தந்தை?

அ) கண்ணகி ஆ) கோவலன் இ) தேவந்தி ஈ) மாதவி

ii) மாசாத்துவான் எந்த மன்னனின் பெருமைக்கு இணையான பெருமை கொண்டவன்?

அ) பாண்டியன் ஆ) சேரன் இ) சோழன் ஈ) பல்லவன்

iii) மாசாத்துவான் எத்தகைய நற்பண்பு கொண்டவன்?

அ) பிறரைக் காத்து வாழும் நற்பண்பு ஆ) பிறரைத் துன்புறுத்தாத நற்பண்பு

இ) பிறரை வஞ்சிக்காத நற்பண்பு ஈ) பிறரைத் தண்டிக்காத நற்பண்பு

iv) கோவலனும் கண்ணகியும் எப்படி வாழ்ந்து வந்தனர்?

அ) சிறப்பாக ஆ) பெருமையாக இ) வளமாக ஈ) மகிழ்ச்சியாக

v) எந்த இடத்தில் மாசாத்துவானின் மனைவியைப் பற்றிக் குறிப்பிடுகிறார் இளங்கோ?

அ) இல்வாழ்க்கை தொடர்பான இடத்தில் ஆ) திருமணம் தொடர்பான இடத்தில்

இ) கொடை தொடர்பான இடத்தில் ஈ) அறம் தொடர்பான இடத்தில்

**2. பின்வரும் பத்தியைப் படித்து அதையடுத்து வரும் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. 5 x 1= 5**

சிப்பாய் கலகத்திற்குப் பிறகு 1858 இல் சென்னை மாகாணம், கிழக்கிந்தியக் கம்பெனியின் கட்டுப்பாட்டிலிருந்து பிரித்தானிய முடியாட்சியின் நேரடிக் கட்டுப்பாடின் கீழ் வந்தது. பிரித்தானிய ஆட்சியாளர்கள், புகைவண்டிகள், தானிய ஊக வாணிகம், புதிய பணப் பயிர்கள், ஏற்றுமதி என பல நவீன முறைகளை இந்தியாவில் அறிமுகப் படுத்தினர். இதனால் உள்ளூர்ச் சந்தைகள் நலிவடைந்து, தானியங்களின் விற்பனை பெருமளவில் சந்தைப்படுத்தப்பட்டது. 1876 ஆம் ஆண்டு எல் நீனோ பருவநிலை மாற்றத்தால், தக்காணப் பீடபூமி முழுவதும் பருவமழை பொய்த்தது. உணவு தானியங்களின் விளைச்சல் பெருமளவு குறைந்தது. உணவு தானிய உற்பத்தி குறைந்தாலும், ஏற்றுமதி குறையவில்லை. சந்தைப் பொருளாதாரத்தில் அசையா நம்பிக்கை கொண்டிருந்த காலனிய ஆட்சியாளர்கள், ஏற்றுமதியை தடை செய்து, பற்றாக்குறையைப் போக்க விரும்பவில்லை. பதுக்கல் பரவலாகி, உணவு தானியங்களின் விலை கட்டுக்கடங்காமல் போனதால், விவசாயிகள் அடுத்த வருடத்திற்கான விதை நெல்லை உண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால் அடுத்த வருடம் பயிரிடப்பட்ட நில அளவு வெகுவாகக் குறைந்து, உணவுப் பற்றாக்குறை தீவிரமடைந்தது. தமிழகத்தின் நெற்களஞ்சியமெனக் கருதப்படும் தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட பட்டினிச் சாவுகள் மிகுந்தன என்று பஞ்ச நிவாரண குழு உறுப்பினர் வில்லியம் டிக்பி தனது ஃபேமைன் கேம்பைன்ஸ் இன் சவுத் இந்தியா என்ற நூலில் தெரிவித்துள்ளார்.

**வினாக்கள்:**

1. பிரித்தானிய முடியாட்சியின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வந்த மாகாணம் எது?
2. 1876 ஆம் ஆண்டு தக்காணப் பீடபூமியில் பருவமழை பொய்க்கக் காரணமான பருவநிலை மாற்றம் எது?
3. உணவு தானிய ஏற்றுமதியை ஏன் தடை செய்யவில்லை?

4. விலை உயர்வால் விவசாயிகள் எதை உண்ணும்  நிலைக்குத் தள்ளப்பட்டனர்?

5. தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டினிச் சாவுகள் மிகுந்தன என்று தன் நூலில் குறிப்பிட்டவர் யார்? அந்நூலின் பெயர் என்ன?

**SECTION - B**

**பகுதி – ஆ (இலக்கணம் 12 மதிப்பெண்கள்)**

**3. சான்று தருக.** **3 x 1= 3**

i) முதனிலைத் தொழிற்பெயர்

அ) பெறு ஆ) பேறு இ) பொறாமை ஈ) பெற்றவன்

ii) இரு பெயரொட்டுப் பண்புத்தொகை

அ) வீடுகட்டினான் ஆ) குகைப்புலி இ) இரவுபகல் ஈ) வாழைமரம்

iii) முன்னிலை வினை

அ) வந்தான் ஆ) நடந்தாய் இ) படித்தேன் ஈ) பறந்தன

**4. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **3 x 1= 3**

i) உயர்திணையில் பால் ............................ வகைப்படும்.

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஏழு

ii) வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது .................................. எனப்படும்.

அ) வினைமுற்றுத் தொடர் ஆ) வேற்றுமைத் தொடர்

இ) பெயரெச்சத் தொடர் ஈ) இடைச்சொல் தொடர்

iii) உவமைக்கும் உவமேயத்திற்கும் இடையில் உவம உருபுமறைந்து வருவது ..................................... எனப்படும்.

அ) அன்மொழித் தெகை ஆ) பண்புத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) வேற்றுமைத் தொகை

**5. இலக்கணக்குறிப்புத் தருக.** **3 x 1=3**

i) பலகை

அ) தனிமொழி ஆ) பொதுமொழி

இ) தொடர்மொழி ஈ) ஓரெழுத்து ஒரு மொழி

ii) உறுபுகழ்

அ) பெயரெச்சத் தொடர் ஆ) உரிச்சொல் தொடர்

இ) வினையெச்சத் தொடர் ஈ) எழுவாய்த் தொடர்

iii) மாறன் வந்தது.

அ) திணை வழு ஆ) பால் வழு

இ) கால வழு ஈ) வினா வழு

**6. கூறியவாறு செய்க. 3 x 1= 3**

i) மரை- பொதுமொழியாக மாற்றுக.

அ) பொற்றாமரை ஆ) தாமரை இ) மரக்கரையர் ஈ) மாத்திரை

ii) பாலை உடைய குடம் - உருபும் பயனும் உடன் தொக்க தொகையாக மாற்றுக.

அ) பழைய குடம் ஆ) பாலோடு குடம்

இ) குடத்தில் பால் ஈ) பால் குடம்

iii) கரடி வந்தார் – வழாநிலையாக மாற்றுக.

அ) கரடி வந்தான் ஆ) கரடி வந்தாள்

இ) கரடி வந்தார் ஈ) கரடி வந்தது

**SECTION - C**

**பகுதி – இ (இலக்கியம் 31 மதிப்பெண்கள்)**

**7. கீழ்க்காணும் திருக்குறளில் விடுபட்ட சீரினை நிரப்புக. 3 x 1= 3**

i) வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் ............................

அ) பெறும் ஆ) இரவு இ) அறிவு ஈ) பேறு

ii) பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
......................................... வேண்டு பவர்.

அ) நாகரிகம் ஆ) நிறைவும் இ) அறிவும் ஈ) தன்னுயிரும்

iii) முயற்சி திருவினை ....................................முயற்றின்மை

இன்மை புகுத்தி விடும்.

அ) செல்வம்  ஆ) ஆக்கும்  இ) உறவும்  ஈ) இன்மை

**8. கீழ்க்காணும் பாடலைப் படித்து அதையடுத்து வரும் வினாக்களுக்கு விடையளி.** **5 x 1 = 5**

விதிமுறை கதலி பூகம் கவரிவால் விதானம் தீபம்
புதியதோர் நிறைநீர்க் கும்பங் கதலிகை புனைந்த மன்றல்
கதிர்மணி மாடத் தம்பொற் சேக்கைமேற் கற்றோர் சூழ
மதிபுனை காடன் தன்னை மங்கல அணிசெய் தேற்றி.

**வினாக்கள்:**

i) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

அ) கலித்தொகை  ஆ) நாச்சியார் திருமொழி

இ) புறநானூறு  ஈ) திருவிளையாடற் புராணம்

ii) இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) ஆண்டாள்  ஆ) பரஞ்சோதி முனிவர்

இ) குடபுலவியனார்  ஈ) நாகூர்ரூமி

iii) இடைக்காடனாரின் நண்பர் யார்?

அ) கபிலர்  ஆ) நக்கீரர்  இ) பரணர்  ஈ) ஓதலாந்தையார்

iv) இப்பாடலின் ஆசிரியர் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்?

அ) 17-ஆம் நூற்றாண்டு  ஆ) 13-ஆம் நூற்றாண்டு

இ) 12-ஆம் நூற்றாண்டு  ஈ) 15-ஆம் நூற்றாண்டு

v) இப்பாடலில் உள்ள மொத்தப் படலங்களின் எண்ணிக்கை எத்தனை?

அ) 52  ஆ) 95  இ) 64  ஈ) 45

**9. ஏதேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடை எழுதுக.** **2 x 4 = 8**

i) குமர குருபரர் முருகனை எவ்வாறு செங்கீரை ஆடச் சொல்கிறார்?

ii) இறைவனுக்கும் பாண்டியனுக்கும் நடைப்பெற்ற உரையாடல்களை எழுதுக.

iii) இலக்கியங்கள் அறிவியல் கோட்பாடுகளைத் தாங்கி நிற்கின்றன என்பதை கீரந்தையாரின் பாடல் வழி விளக்குக.

iv) மாற்றம் பற்றி காலக்கணிதத்தில் கண்ணதாசன் கூறுவன யாவை?

**10. ஏதேனும் மூன்று உரைநடை வினாக்களுக்கு விடை எழுதுக. 3 x 5 = 15**

i) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

ii) மொழிபெயர்ப்பில் இலக்கிய இறக்குமதி குறித்து விவரி.

iii) நாட்டுவளமும் சொல்வளமும் தொடர்புடையது என்பதைப் பாவாணர் வழிநின்று விளக்குக.

iv) காற்று மாசுபாட்டினால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அவற்றைத் தவிர்க்கும் வழிமுறைகளையும் எழுதுக.

v) மனிதர்களின் அன்றாட உயிர் மூச்சாகிய நான், இன்று நவீன உலகை இயக்கும் ஆற்றல் மையமாகவும் மாறியுள்ளேன்" — 'கேட்கிறதா என் குரல்!' பாடப்பகுதியின் வழி காற்று தன்னை ஓர் ஆற்றல் வளமாக எவ்வாறு பிரகடனப்படுத்துகிறது? விளக்குக.

## SECTION - D

### பகுதி - ஈ (துணைப்பாடம் 10 மதிப்பெண்கள்)

**11. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக. 1 x 10 = 10**

i) கோபல்லபுரத்து மக்கள்

ii) பிரும்மம்

iii) புதிய நம்பிக்கை

### பகுதி - உ (படைப்பாற்றல் 17 மதிப்பெண்கள்)

**12. பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. 1 x 3 = 3**



**13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று எழுதுக. 1 x 8 = 8**

i) உங்கள் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து இரைச்சலை தடுக்கக் கோரி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ii) உனது ஊட்டி சுற்றுலா பயண அனுபவத்தை நண்பனுக்குப் பகிர்ந்து கடிதம் எழுதுக.

**(இரு கடிதங்களிலும் உன் முகவரி சபீர்/ சபிகா, 10 மேலச்சித்திரை வீதி, மதுரை – 625001 எனக் கொள்க)**

**14. பின்வரும் தலைப்புகளைப் பயன்படுத்தி ஏதேனும் ஒரு கட்டுரை**

**எழுதுக. 1 x 6 = 6**

i) முன்னுரை - சாலைகளின் வகைகள் - வேகக்கட்டுப்பாடு - உயிர் பாதுகாப்பு - நினைவில் கொள்ள வேண்டிய விதிகள் - முடிவுரை

**(அல்லது)**

ii) முன்னுரை - அன்றாட வாழ்வில் சிக்கனம் - சிக்கனமும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் - சேமிப்பின் அவசியம் - சிக்கன வாழ்வின் நன்மைகள்- முடிவுரை

**(அல்லது)**

iii) முன்னுரை - பெண் கல்வியின் முக்கியத்துவம் - சமுதாய மற்றும் பொருளாதார வளர்ச்சி - குடும்ப முன்னேற்றத்தில் பெண்ணின் பங்கு - பெண் கல்வியால் ஏற்படும் நன்மைகள் – முடிவுரை

********************************